# කාර්ය සාධන වාර්තාව 2015
# செயல் நிறைவேற்ற அறிக்கை 2015
# Performance Report 2015

තැපැල්, තැපැල් සේවා හා මුස්ලිම් ආගමික කටයුතු අමාත්‍යාංශය

அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு

Ministry of Posts, Postal Services and Muslim Religious Affairs

# செயல் நிறைவேற்ற அறிக்கை 2015

## அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு

அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய
விவகாரங்கள் அமைச்சு
6 ஆம், 7ஆம் மாடி
அஞ்சல தலைமையகம்
310, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 10.

# உள்ளடக்கம்

பக்கம்


- அறிமுகம் 1 - 4
- தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் 4 - 10
- அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் 11 - 20
- விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள் 21 – 23
- உள்ளக கண்க்காய்வு வினாக்கள் 2015 ஆம் ஆண்டு 23
- நிதி நடவடிக்கைகள் 24 – 25
- இணைப்பு 01 / 02

# தபால், தபால் சேவைகள் மற்றும்முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

## 2015.01.01 முதல் 2015.12.31 வரையான முன்னேற்றம்

### அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/13 ஆம் இலக்க 2015.09.21ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் கீழ் கொள்ளப்படுகின்ற நிறுவனங்கள் பின்வவருமாறாகும்.

- தபால் திணைக்களம்
- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட முன்னர் இந்த அமைச்சு முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சு என்ற பெயரில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், இதன் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு திணைக்களங்களும் இயங்கி வந்தன.
215 வருடங்களுக்கும் அதிக காலமாக இலங்கை தபால் சேவை அமுலில் உள்ளதுடன், இலங்கையில் தற்போது 653 தபால் அலுவலகங்களும், 3410 உப தபால் அலுவலகங்களும், 524 முகவர் தபால் அலுவலகங்களும், 04 தோட்டத்துறை முகவர் தபால் அலுவலகங்களும், 101 கிராமிய முகவர் தபால் அலுவலகங்களுமாக 4692 தபால் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும் நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் கடிதங்களை விநியோகிப்பதற்காக தபால்காரர்கள் 7202 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுடன், பொது மக்களுக்கு கடிதங்களைத் தபால் செய்யும் பொருட்டு 14391 தபால் பெட்டிகள் நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய நவீன தபால் சேவையை பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக தபால் அலுவலகங்கள் 653 இற்கு இணையத்தள வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வலையமைப்புச் செய்வதைப் பயன்படுத்தி பாரம்பரிய தபால் சேவைகள் புதிய அணுகுமுறையினூடாக பொது மக்களுக்குத் தேவையான தபால் தொடர்பாடல் வசதிகள், வங்கி வசதிகள், நிதி வசதிகள், காப்புறுதி வசதிகள் மற்றும் கடுகதி தபால் சேவைகளையும் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் போது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு பட்டியல்களைச் செலுத்தல், வியாபாரத் தபால், செலிங்கோ காப்புறுதித் தவணைப்பணம் செலுத்தல் மற்றும் காப்புறுதி தவணைப் பத்திரங்களை தபால் அலுவலகங்கள் ஊடாக மக்களுக்கு பெற்றுக் கொடுத்தல், தெற்கு நெடுஞ்சாலையைப் பயன்படுத்தி ஒரு நாள் கடுகதி கடிதங்களை விநியோகிக்கும் சேவையானது மாத்தறை, காலி மற்றும் கொழும்புக்கு இடையே ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் யூ ஜென் தபால் முன்கொடுப்பனவுச் சேவைகளை தபால் அலுவலக வலையமைப்பின் ஊடாக அமுல்படுத்தல் போன்ற பல்வேறு சேவைகள் 2015 ஆம் ஆண்டில் தபால் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் இலங்கையிலுள்ள தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு பணம் அனுப்புவதற்காக வெஸ்ரன் யூனியன் நிறுவனத்தினூடாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்கள் தேசிய சேமிப்பு வங்கி ஊடாக அனுப்புகின்ற பணத்தை தபால் அலுவலகங்கள் ஊடாக தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு துரிதமாக பணம் அனுப்பும் முறையும் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்கு உரித்தான புதிய பிரிவாக முஸ்லிம் சமய மற்றும் விசேட தபால் சேவைகள் பிரிவு 2015.03.01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது மேலதிக செயலாளர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றது. முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்துக்கு உரித்தான விடயப்பரப்பின் சகல நடவடிக்கைகளும், தபால் திணைக்களத்திற்கு உரித்தான விடயப்பரப்பின் விசேட கருத்திட்டப் பிரிவும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசேட தபால் சேவை நடவடிக்கைகள்) இந்தப் பிரிவினால் கண்காணிப்பும், ஒருங்கிணைப்புச் செய்யப்படுகின்றன.

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின், நோக்கு, செயற்பணி, அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள், நோக்கங்கள் மற்றும் செயற்பணி ஆகியன பின்வருமாறாகும்.

## நோக்கு

மிகச்சிறந்த, வினைத்திறன்மிக்க தபால் சேவையும், இஸ்லாமிய சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்துவதும் .

## செயற்பணி

நம்பகமானதும், உயர் தரம்மிக்கதுமான தபால் சேவையை தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும், இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தின் சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதும்,

## அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள்

1. முத்திரைகள் கட்டளைச் சட்டம் (1909 இன் 22 ஆம் இலக்கம்)
2. அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டம் (1908 இன் 11 ஆம் இலக்கம்)
3. முஸ்லிம் பள்ளிவாயல்கள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது வக்புகள் சட்டம் (1956 இன் 51 ஆம் இலக்கம்)

## நோக்கங்கள்:

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விடயங்கள் சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தல்.
2. செலவினத்தைக் குறைத்து பொது மக்களுக்கு மிகவும் இலாபகரமானதும், வினைத்திறன்மிக்கதும், நட்புறவானதுமான தபால் சேவையை வழங்குதல்.
3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூகோள போக்குகளுடன் ஒத்திசைந்த வகையில் தபால் சேவையினை விரிவாக்கல்.
4. தபால் சேவையின் தரம், நியமங்கள் மற்றும் மேம்படுத்தலை உறுதிசெய்தல்.
5. உள்நாட்டுத் தபால் தொடர்பாடல் சேவைக்குச் சமாந்தரமாக நிதிசார் சேவை வசதிகளை கிராமிய மட்டம் வரை விஸ்தரித்தல்.
6. முகவராண்மை சேவைகளை ஆற்றும் பரப்பெல்லையை விஸ்தரித்து தபால் அலுவலகங்களை மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு சேவைகளையும் ஆற்றுகின்ற அலகொன்றாக வலுவூட்டல்.

7. அங்கீகரிக்கப்பட்ட முத்திரைக் கொள்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. நினைவு முத்திரைகள் மற்றும் அது சம்பந்தமான ஆகக்கங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் தனித்துவத்தையும், பெருமையையும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லல்.

9. சர்வதேச தபால் சங்கத்தின் அங்கத்துவ நாடு என்ற வகையில் அதன் ஒழுங்குறுத்தல்களுக்கு அமைய இலங்கையின் தபால் சேவையை சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு சர்வதேச தபால் சேவைசார் மேம்படுத்தல்.

10. முஸ்லிம் பள்ளிவாசல்கள், இஸ்லாமிய சமய நிறுவனங்கள், அறக்கட்டளை நிதியங்கள் என்பவற்றின் சொத்துக்களை நிருவகித்தல்.

11. இஸ்லாமிய மார்க்கக் கல்வி, இஸ்லாமிய கலாசார அம்சங்களை போசிப்பதும், மேம்படுத்துவதும்.

12. சகல இஸ்லாமியர்களுக்கும் ஒரு முறையேனும் ஹஜ் கடமையினை நிறைவேற்றச் செல்வதற்காக மிகவும் நியாயமான முறையியலை ஏற்படுத்துவதற்காக அரச தலையீட்டை உறுதி செய்தல்.

13. மீளாதுன் நபி வைபவத்தை நோக்காகக் கொண்டு முஸ்லிம் சமய, கலாசார மற்றும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

14. ரமழான் நோன்பினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தல்.

## செயற்பணிகள்

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் சம்பந்தமான கொள்கைகளைத் தயார் செய்வதும், அமுல்படுத்துவதும்.

2. அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களையும் வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

3. தபால்துறை மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. தபால் துறை மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருவதும், அத்தொடர்புகளை மேம்படுத்துவதும்.

5. தகவல் தொழில்நுட்பச் துறையின் அபிவிருத்திக்கு இசைவாக திணைக்களத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

6. சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக தபால் சேவைகளைப் பேணிவருவதும், வழிநடாத்துவதும்.

7. அதிவேக தபால் மற்றும் பொதிச் சேவைகள் மற்றும் சகல நிதிசார் சேவைகளையும் தபால் அலுவலகக் கட்டமைப்பின் ஊடாக விஸ்தரிப்பதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

8. அரசாங்க மற்றும் தனியார் துறையின் பங்கேற்பின் ஊடாக வினைத்திறனும், உற்பத்தித்திறனும், தரமும்மிக்க தபால் சேவையைப் பொது மக்களுக்குப்பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

9. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு, நிதிப் பரிமாற்றல் சேவைகளை மேம்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

10. சர்வதேச தபால் சங்கத்தின் மற்றும் ஆசிய பசுபிக் தபால் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரச ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் தபால் திணைக்களத்தை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

11. தபால் மற்றும் உப தபால் அலுவலக கட்டமைப்பின் ஊடாக காசுப் பரிமாற்றம், காப்புறுதிச் சேவைகள் மற்றும் வங்கி மற்றும் ஏனைய நிதிச் சேவைகளை ஆரம்பிப்பதும், தற்போது காணப்படுகின்ற முகவராண்மைச் சேவைகளை மேம்படுத்துவதை கண்காணிப்புச் செய்வதும்.

12. முத்திரைக் கொள்கைக்கு இவைசாக உள்நாட்டுத் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு தபால் முத்திரை மற்றும் வருமான முத்திரைகளை வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல், சந்தைப்படுத்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டை நல்ல முறையில் பேணிவருவதைக் கண்காணிப்புச் செய்தல்.

13. நினைவு முத்திரைகள் மற்றும் அது தொடர்பான ஆக்கங்களை அவற்றின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல் மற்றும் சந்தைப்படுத்துவதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

14. வக்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதும், வக்பு சபையின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்வதும்.

15. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மீலாதுன் நபி வைபவத்திற்கென திரண்ட நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள நிதியை முஸ்லிம் சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

16. புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் நாடுகளில் இருந்து அன்பளிப்பாக எமது நாட்டுக்கு கிடைக்கும் பேரீத்தம் பழங்களை சகல முஸ்லிம் குடும்பங்களையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் விநியோகித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

17. ஹஜ் யாத்திரை தொடர்பாக சவுதி அரசாங்கத்துடன் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல், ஹஜ் யாத்திரையை ஒழுங்கு செய்யும் அமைப்புக்களை தெரிவு செய்தல், ஹஜ் பங்கினை (Quota) முறையாக பகிர்ந்தளித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

## 01. தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பற்றிய தகவல்கள் இணைப்பு 1 மற்றும் இணைப்பு 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான செயற்பணி பற்றிய பொழிப்புரை கீழே தரப்பட்டுள்ளது.

(1) அமைச்சின் பதவியணியினர் மற்றும் அதன் கீழுள்ள தபால் திணைக்களம், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் ஊழியர்களின் தாபன நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

(2) அமைச்சின் நிருவாக நடவடிக்கைகளை வழிநடாத்தல்

(3) அமைச்சின் ஊடக நடவடிக்கைகளை நிறைவேற்றல்

(4) பாராளுமன்றத் தேவைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

1. **2015.01.01 திகதி முதல் 2015.12.31 வரையான காலப்பகுதிக்குள் அமைச்சின் தாபனப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றம்**

### 1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

| I. தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பதவிப் பெயர் / சேவை | புதிய பதவிகளை ஏற்படுத்த கோரிக்கை விடுத்தல் | பதவிகளை ஏற்படுத்துவதற் கான அங்கீகாரம் | வெற்றிடம நிரப்பல் / இணைப்புச் செய்தல் / புதிய பதவிகளை ஏற்படுத்தல் | இடமாற்றம் | ஓய்வுறுத்தல் | சேவையை முடிவுறுத்தல் | ஆட்சேர்ப்பு | ஏனையன |
| செயலாளர் | - | - | 02 | - | - | 02 | - | - |
| இலங்கை நிர்வாக சேவை | | | | | | | | |
| 1. மேலதிக செயலாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 2. சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 3. உதவிச் செயலாளர் | 01 | 01 | 01 | - | - | - | - | - |
| இலங்கை நிர்வாக சேவை அல்லாத மேலதிக செயலாளர் | 01 | 01 | 01 | - | - | - | - | - |
| இலங்கை கணக்காளர் சேவை | - | - | 01 | - | - | - | - | - |
| மொழி பெயர்ப்பாளர் | | | | | | | | |
| சிங்களம்/தமிழ் | 01 | 01 | - | - | - | - | - | - |
| சிங்களம்/ஆங்கிலம் | - | - | 01 | - | - | - | - | - |
| அபிவிருத்தி அலுவலர் /இணைந்த அலுவலர் | 03 | 03 | 01 | - | - | - | - | - |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை | 02 | 02 | - | - | - | - | - | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 06 | 04 | 03 | 01 | 01 | - | 03 | - |
| சாரதி சேவை | 02 | 01 | 01 | 08 | - | - | 01 | - |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 01 | 01 | 03 | 01 | - | - | - | அலுவலக சிற்றூழியர் வெற்றிடங்கள் 03 ஐ நிரப்புவதற்காக முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது |
| கௌரவ அமைச்சரின் பதவியணியை நியமனம் செய்தல் | - | - | 46 | - | - | 46 | - | - |
| கௌரவ பிரதி அமைச்சரின் பதவியணியை நியமனம் செய்தல் | - | - | 21 | - | - | 21 | - | - |
| போக்குவரத்து அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதியின் கல்வித் தகைமைகளை திருத்தியமைக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | | | | | | | | |

## 1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

<table>
<tr><th colspan="9">II. தபால் திணைக்களம்</th></tr>
<tr><th>பதவிப் பெயர் / சேவை</th><th>புதிய பதவிகளை ஏற்படுத்த கோரிக்கை விடுத்தல்</th><th>பதவி ஏற்படுத்தவதை அங்கீகாரித்தல்</th><th>வெற்றிடங்களை நிரப்பல் / இணைப்புச் செய்தல் / புதிய நியமனம்</th><th>இடமாற்றம்</th><th>ஓய்வுறுத்தல்</th><th>சேவையை முடிவுறுத்தல்</th><th>ஆட்சேர்ப்பு</th><th>வேறு</th></tr>
<tr><td>இணைந்த தபால் சேவை</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>27</td><td>-</td><td>-</td><td>* இணைந்த தபால் சேவையின் ஆ இன் தரம் iii வகுதி ஆ ஐச் சேர்ந்த தபால் சேவை அலுவலர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 284 வெற்றிடங்களும், திறந்த அடிப்படையில் 578 வெற்றிடங்களும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.</td></tr>
<tr><td>இணைந்த தபால் சேவையின் தொகுதி அ இன் தரம் iii வகுதி அ ஐச் சேர்ந்த உதவி நிர்வாகச் செயலாளர் மற்றும் உதவி அத்தியட்சகர் பதவிகள்</td><td>-</td><td>-</td><td>11</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>* அலுவலர்கள் 05 பேரை இணைந்த தபால் சேவையின் தொகுதி அ இன் தரம் iii வகுதி அ இற்கு சேவை முதுமை மற்றும் திறமை அடிப்படையில் பதவி உயர்த்துவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நோமுகப் பரீட்சை நடாத்தப்பட்டது.</td></tr>
<tr><td>இலங்கை தொழில்நுட்ப சேவையின் கட்டிட பரிசோதகர்</td><td>09</td><td>09</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td colspan="9">1. தொழில்சங்க நடவடிக்கைகளுக்கு அலுவல்களை விடுவித்தல் - 04<br>2. பொதுவான வினைத்திறனின்மையின் அடிப்படையில் மற்றும் ஓய்வூதிய யாப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுறுத்தல் - 12<br>3. இணைந்த தபால் சேவையின் அ தொகுதியின் தரம் II இல் 2013.06.16 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு அமைய, 2015.02.12 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன், மேற்படி நேர்முகப் பரீட்சைக் குழுவின் சிபாரிசுகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>4. இணைந்த தபால் சேவையின் அ தொகுதியின் தரம் III இன் ஆ தொகுதிக்கு உரித்தான தபால் அலுவலக புலனாய்வு பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் 17 மற்றும் தபால் கணக்குப் பரிசோதகர் பதவிகள் 26 இனை மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை மூலம் நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>5. தபால் பயிற்சி நிறுவகத்தின் போதனாசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.</td></tr>
<tr><td>இலங்கை கணக்காளர் சேவை</td><td>-</td><td>-</td><td>06</td><td>15</td><td>-</td><td>-</td><td>-</td><td>நிரந்தர பதவிக்கு மேலதிகமாக பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமனம் செய்வதற்கு அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு 06 சிபாரிசுகள் அனுப்பப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>05</td><td>-</td><td>-</td><td>-</td></tr>
</table>

### 1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

| III. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பதவிப் பெயர் / சேவை | புதிய பதவிகளை ஏற்படுத்த கோரிக்கை விடுத்தல் | பதவி ஏற்படுத்தவதை அங்கீகரித்தல் | வெற்றிடங்களை நிரப்பல் / இணைப்புச் செய்தல் / புதிய நியமனம் | இடமாற்றம் | ஓய்வுறுத்தல் | சேவையை முடிவுறுத்தல் | ஆட்சேர்ப்பு | வேறு |
| இலங்கை நிர்வாக சேவை | 05 | 02 | - | - | - | - | - | வெற்றிடங்களை நிரப்புவதற்காக இ.சே.ப.நா. இடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுS |
| இலங்கை கணக்காளர் சேவை | 01 | 01 | - | - | - | - | - | - |
| இலங்கை பொறியியலாளர் சேவை | 01 | - | - | - | - | - | - | - |
| தொழில்நுட்பச் சேவை | 01 | - | - | - | - | - | - | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 07 | 02 | - | - | - | - | - | - |
| சாரதி சேவை | 05 | 01 | - | - | - | - | - | சாரதி சேவையின் 02 பதவிகளுக்கு பதில் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 01 | - | - | - | - | - | - | - |
| காதி சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் – 01, அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் – 01, அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர்) – 01, அலுவலக சிற்றூழியர் - 02 | | | | | | | | |

**1.2 பல்வேறு நிறுவனங்களினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பாக பதில் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும், அறிக்கைகளைக் கோருவதும்**

| அறிக்கை சமர்ப்பித்த நிறுவனம் / மேன்முறையீடுகள் | ஜனாதிபதி அலுவலகம் | பிரதம அமைச்சர் அலுவலகம் | அரசாங்கச் சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த | பொது மனுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை | ஓம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் | அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | தொடர்பாகவும் தபால் மாஅதிபரிடம் கோரப்பட்டுள்ள அறிக்கைகள் | | | அனுப்பப்பட்ட பதில் கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மேன்முறையீட்டாளர்களிடம் கிடைத்த கடிதங்கள் | கோரப்பட்ட அறிக்கைக | கிடைத்த பதில்கள் | |
| 1. உப தபால் நிலையப் பொறுப்பதிகாரி சேவை | - | - | 15 | - | - | - | 07 | 21 | 18 | 15 | 15 |
| 2. தபால் திணைக்கள கனிஷ்ட சேவையின் பல்வேறு சிக்கல்கள் தொடர்பாக | - | - | 13 | - | - | - | 12 | 12 | 57 | 29 | 07 |
| 3. இணைந்த தபால் சேவையிலிருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள அலுவலர்கள் சமர்ப்பித்துள்ள மேன்முறையீடுகள் | 29 | 06 | 47 | 26 | 04 | 02 | 19 | 12 | 45 | 25 | 14 |
| 4. மேன்மை தங்கிய சனாதிபதி, கௌரவ பிரதி அமைச்சர், கௌரவ அமைச்சர் ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பாக | 19 | 01 | - | - | - | - | - | 272 | 272 | 20 | 20 |
| 5. இணைந்த தபால் சேவையில் ஈடுபட்டு ஒழுக்காற்று கட்டளைகளைப் பெற்றுள்ள மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட அலுவலர்கள் | - | - | 03 | - | - | - | - | - | 05 | - | - |
| 6. தொழில் சங்க நடவடிக்கைகள் | - | - | - | - | - | - | - | - | 10 | - | - |
| 7. இலஞ்ச, ஊழில் பற்றி ஆராயும் ஆணைக்குழுவினால் வினவல் | - | - | - | - | - | - | - | - | 03 | - | - |
| **மொத்தம்** | 48 | 07 | **78** | **26** | **04** | **02** | **38** | 317 | 410 | 89 | 56 |

- இதற்கு மேலதிகமாக பின்வரும் அறிக்கைகளும், விஞ்ஞாபனங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

i. பதில் அனுப்பப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை - 05

ii. ஆலோசனைக் குழுவுக்கு பதிலளிக்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்கான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் - 04

iii. சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 21
(தீர்மானைங்கள் கிடைத்துள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை -20)

- **தபால் திணைக்களத்தின் அலுவலர்களது**

i. திடீர் விபத்து லீவுகளை அங்கீகரித்தல் - 24
ii. விசேட லீவுகளை அங்கீகரித்தல் - 20
iii. அ.நி. சுற்றறிக்கை 22/93 இன் கீழ் நட்டஈடு செலுத்தல் - 05

## 1. 3 மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், சேவைகள், வசதிகளுக்கான செலவினம்

| பணி | செலவுத் தலைப்பு | உறுதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | அங்கீகரித்த தொகை (ரூ) | செலவிட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| **சேவை மற்றும் வசதிகள்** | | | | |
| **வாகனம்** | | | | |
| பராமரிப்பு | 1301 | 266 | 8,529,000.00 | 8,524,935.18 |
| எரிபொருள் விநியோகம் | 1202 | 349 | 7,707,500.00 | 7,707,076.44 |
| **சேவைகள்** | | | | |
| நீர், மின்சாரப் பட்டியல் | 1403 | 33 | 4,740,000.00 | 4,736,870.79 |
| துப்பரவேற்பாடு | 1405 | 12 | 4,211,000.00 | 4,205,509.18 |
| பாதுகாப்பு | | 12 | | |
| உபசரணை | 1203 | 68 | 990,000.00 | 989,080.66 |
| உபகரணம் பராமரிப்பு | 1302 | 32 | 462,000.00 | 458,465.57 |
| வாடகை செலுத்தல் மற்றும் ஏனையன (பிரதி அமைச்சர் அலுவலகம்) | 1404 | 03 | 2,569,500.00 | 2,569,354.84 |
| தொடர்பாடல் | 1402 | 531 | 2,085,000.00 | 2,078,726.59 |
| **மேலதிக நேரம் / பிரயாணச் செலவினம், வேறு செலவினங்களைச் செலுத்தல்** | | | | |
| மேலதிக நேரம் | 1002 | 504 | 3,500,000.00 | 2,315,735.70 |

### 1. 4. வெளிநாட்டு லீவு அங்கீகரித்தல்

| | அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|---|
| லீவு /தனிப்பட்ட | 1 | 139 | 02 |
| தொழில் | - | 05 | - |

### 1. 5. பயிலுனர்களை சேவைசார் பயிற்சியில் ஈடுபடுத்தல்

| அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|
| 03 | 24 | 03 |

### 1. 6 . தகவல் ஊடகத் துறைப் பிரிவின் செயற்பணிகள்

2015 ஆம் ஆண்டின் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ளும் போது அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடு பற்றிய பிரச்சார நடவடிக்கைகள் மூலம் விசேட பங்களிப்பை பெற்றுக்கொடுக்க முடிந்தது. அதற்கமைய கட்புல காணொளித் தொகுப்புக்கள் மூலம் விவரண நிகழ்ச்சிகள் பல ஊடகப் பிரிவினால் உருவாக்கப்பட்டன.

168 ஊடக அறிவித்தல்கள்,
15 செய்தியாளர் மாநாடுகள்,
சுமார் 814 புகைப்படங்கள் மற்றும்

சுமார் 222 காணொளிக் கெசட்கள் போன்றன வெளி ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1. 7. වෙනත් ආයතනික කටයුතු

- **உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல் – அமைச்சு**
  - சுத்தம் செய்வதற்காக – வரையறு. ஸ்மாட் ஜெனிடர்ஸ் பிறை. லிமி.
  - பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக – அயன் ஆம்ஸ் நிறுவனம்
  - வளிச் சீராக்கி இயந்திரங்களைப் பராமரித்தல் – அஸோசியேடட் இன்ஜினியரிங் பிறை. லிமி.
  - கணினி இயந்திரங்களுக்கு – எசன்சியல் மெயின்டனன்ஸ் பிறை. லிமி.
  - பிரதி பண்ணும் இயந்திரங்களுக்கு – மெட்ரோ பொலிடன் ஒபிஸ் பிறை. லிமி., ஜோன் கீல்ஸ் ஒபிஸ் பிறை. லிமி.
  - மல்டிமீடியா புரொஜக்டர் – சுவதீஸ் ட்ரேடிங் ஓடியோ விசுவல் பிறை. லிமி.

- புகையிரத ஆணைச்சீட்டு வழங்கல் - 42
- அக்ரஹார காப்புறுதி நட்டஈடு கோல் - 05
- சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோப்புக்களின் எண்ணிக்கை - 21
- **கடன் வழங்கல்**
  - இடர் கடன் - 47
  - ஆதனக் கடன் - 01

- சலுகை மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் - 07
- உள்ளக கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை
  - சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை - 09
  - அனுப்பப்பட்ட பதில்களின் எண்ணிக்கை - 06

### 1. 8. நலன்புரிச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்

அமைச்சின் அலுவலர்களுக்கு அத்தியவசியமான பொருட்களைப் பெற்றுக் கொடுத்து நலன்புரிச் சேவைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 02 . அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள்

- நாடு முழுவதிலும் இயங்கி வருகின்ற தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, தபால் திணைக்களம், முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்பான நடவடிக்கைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு பிரேரணைகளும், தீர்மானங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தபால் சேவை நடவடிக்கைகளுக்காக காணிகளை சுவீகரித்தல் தொடர்பான (சுமார் 90 கோப்புக்கள்) பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பரகடுவ மற்றும் வந்துரம்ப தபால் அலுவலகங்களுக்கு காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- தபால் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகளின் சேவைகளை முறையாகவும், ஒழுங்காகவும் பெற்றுக் கொடுப்பதற்காக கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தபால் திணைக்களத்தினால் தற்போது ஒப்பந்தம் செய்துகொண்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு சேவைகள் சம்பந்தமாக சட்ட மாஅதிபரின் அறிவுரைக்கு அமைய முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பாக தபால் மாஅதிபரின் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- அச்சு ஊடகங்களினூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் பிரேரணைகளைக் கவனத்தில் கொண்டு குறித்த சிக்கல்களைத் தீர்த்துவைத்து தபால் சேவைகளை மேம்படுத்தவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தபால் மாஅதிபருக்கு உரிய ஆலோசனைகள் வழங்குவதும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அறிவிப்பதும்.

- உலக தபால் தினம் 2015 ஐ முன்னிட்டு வருடாந்தம் நடாத்தப்படுகின்ற சர்வதேச கடிதம் எழுதும் போட்டி, தேசிய மற்றும் மாகாண மட்டத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கான சித்திரம், கட்டுரைப் போட்டியை நடாத்தத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக தபால் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

### 2.1. முத்திரை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

- முத்திரையின் பெறுமதியைப் பாதுகாக்கும் வகையில் தரமான முத்திரைகளை அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள முத்திரைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| **தலைப்பு** | **வெளியிடப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை** | **நினைவு ஆவணங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| வருடாந்தம் வெளியிடுபவை | 07 | 02 |
| உலக தபால் தினம் | 01 | - |
| சிறுவர் செயற்பாடுகள் | 01 | - |
| தேசிய நிகழ்வுகள் | 05 | 01 |
| சர்வதேச நிகழ்வுகள் | 02 | 01 |
| இலங்கையின் பெருமை | 08 | 02 |
| வேறு விசேட சம்பவங்கள் | 02 | 01 |
| வருடாந்த முத்திரை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்காதவை | 06 | - |
| **மொத்தம்** | 32 | 07 |

- முத்திரைப் பணியகத்திற்கு தபால் சேவைகள் அமைச்சினால் 04 மில்லியன் ரூபாவும், தபால் திணைக்களத்தினால் 06 மில்லியன் ரூபாவும் ஆக 10 மில்லியன் ரூபா முத்திரைகளை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

### 2. 2. மனித வள அபிவிருத்தி

- உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்

| | **பயிற்சி பெற்ற அலுவலர் தொகுதி** | **பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை** | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01. | பதவி நிலை அலுவலர்கள் | 07 | 02 |
| 02. | அபிவிருத்தி உதவியாளர் | 21 | 09 |
| 03. | அபிவிருத்தி அலுவலர் | 09 | 05 |
| 04. | முகாமைத்துவ உதவியாளர் | 17 | 11 |
| 05. | சாரதி | 02 | 01 |
| 06. | அலுவலக சிற்றூழியர் | 09 | 03 |
| 07. | சகல பதவியணியினரும் | 21 | 01 |
| | **மொத்தம்** | **86** | **32** |

➢ வெளிநாட்டு மாநாடுகள் / பயிற்சி நடவடிக்கைகளில் பங்கேற்றல்

**தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு**

| அலுவலர் தொகுதி | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | சுற்றுலா மேற்கொண்ட நாடு | விடயம் |
|---|---|---|---|
| கௌரவ அமைச்சர் மற்றும் பதவியணியினர் | 02 | KSA | Courtesy visit to the Kingdom of Saudi Arabia to meet His Excellency the Minister of Haj. |
| | 03 | KSA | Haj Pilgrimage 2015. |
| | 02 | Turkey | The 1st Muslim Religious Leader Summit foe Asia and Pacific Countries. |
| | 01 | Egypt | Supreme Islamic Council |
| பதவி நிலை அலுவலர்கள் | 01 | KSA | Courtesy visit to the Kingdom of Saudi Arabia to meet His Excellency the Minister of Haj. |
| | 02 | Thailand | APPC / Advanced Business Management Course. |
| | 01 | Pakistan | APPU – Executive Council Meeting. |
| | 01 | KSA | Haj Pilgrimage 2015. |
| | 01 | Switzerland | Invitation to attend the UPU Council of Administration and Postal Operation Council |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 05 | India | Emotional Balancing Programme. |
| **மொத்தம்** | **19** | | |

**தபால் திணைக்களம்**

| அலுவலர் தொகுதி | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | சுற்றுலா மேற்கொண்ட நாடு | விடயம் |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 04 | Pakistan | APPU – Executive Council Meeting |
| | 01 | Malaysia | 1st Workshop of Quality of Service & supply chain improvement project in the Asian countries. |
| | 02 | Malaysia | Sixth Regional UPU workshop on the Development of Electronic Postal Payment Services in Asian Countries. |
| | 02 | Thailand | Advanced Business Management Course. |
| | 01 | Thailand | International Mail Accounting Course. |
| | 01 | Malaysia | Second Country Study Visit, National University. |
| | 01 | India | International Training Programme in Rafi Ahmed Kidawi National Postal Academy. |
| | 01 | Thailand | Course on Marketing & Innovation. |

| | | | |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 01 | Pakistan | Operations Management Programme. |
| | 01 | Kuwait | Bak Maha Ulela - Programme. |
| | 01 | Thailand | Human Recourse Management Course. |
| | 01 | Thailand | E - Business & Technology Management Course. |
| | 01 | Pakistan | Establishment of South Asian Postal Union. |
| | 01 | India | mBillionth South Asia Congress Award Ceremony. |
| | 02 | Thailand | Regional Strategy Conference and Round Table. |
| | 02 | Thailand | Strategy Formulation and Execution. |
| | 02 | Thailand | 60th anniversary of Sri lanka- Thailand Diplomatic Relations. |
| | 01 | Switzerland | First UPU Global Conference on Trade Facilitation. |
| | 02 | Thailand | APPU Postal Business Forum on Delivery on the Strategy. |
| | 02 | India | International Training programme. |
| | 02 | Philippines | Quality of Service and Support Chain Improvement Project in the Asian Countries. |
| | 01 | Korea | Asian Pacific Post CEO Forum |
| தபால் சேவை அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் | 02 | India | Advanced Postal Management Programme. |
| | 01 | Malaysia | 1st Workshop of Quality of Service & supply chain improvement project in the Asian countries. |
| | 01 | Thailand | UPU Transport workshop for the Asia - Pacific region APPC. |
| | 02 | Thailand | APPC Fellowship on Postal Development Course. |
| | 02 | Pakistan | Operations Management Programme. |
| | 02 | Thailand | E - Business & Technology Management Course. |
| | 01 | India | mBillionth South Asia Congress Award Ceremony. |
| | 02 | Thailand | APPU epacket Operation and IT Training workshop. |
| **மொத்தம்** | **46** | | |

**முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்**

| **அலுவலர் தொகுதி** | **பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை** | **சுற்றுலா மேற்கொண்ட நாடு** | **விடயம்** |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 01 | KSA | Courtesy visit to the Kingdom of Saudi Arabia to meet His Excellency the Minister of Haj. |
| | 03 | KSA | Haj Duty 2015. |
| | 01 | Turkey | The 1st Muslim Religious Leader Summit foe Asia and Pacific Countries. |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 01 | KSA | Haj Duty 2015. |
| சாரதி | 01 | KSA | Haj Duty 2015. |
| **மொத்தம்** | **07** | | |

2. 3. **தபால் அலுவலக வலயமைப்புக் கருத்திட்டம்**

❖ 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தபால் அலுவலகங்களை வலையமைப்புச் செய்யும் கருத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை 648.81 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட திருத்திய தொகை 11.225 மில்லியன் ரூபாவாகும். மேற்படி தொகை 2014 ஆம் ஆண்டுக்கான கடப்பாடுகளுக்குச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய தற்போது தபால் அலுவலகங்களை வலையமைப்புச் செய்யும் கருத்திட்டம் பூர்த்தியடைந்திருப்பதுடன் 653 தபால் அலுவலகங்கள் இதனூடாக வலையமைப்பில் இணைந்துள்ளன. இந்தக் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்தச் செலவினம் 538.69 மில்லியன் ரூபா ஆகும்.

இக்கருத்திட்டத்தை அடுத்து புதிய தகவல் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய சேவைகளை தபால் அலுவலக வலையமைப்பின் ஊடாக அறிமுகம் செய்ய முடிந்ததுடன், தற்போதுள்ள சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்ளவும் முடிந்தது. இதன் கீழ் தற்போது மின்சாரம், ரெலிகொம், மொபிரெல் பட்டியல்களை செலுத்துவதானது தபால் அலுவலக வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், செலங்கோ காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதி தவணைப் பணம், காப்புறுதி சான்றிதழ்களை தபால் வலையமைப்பின் ஊடாக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல், UGEN தபால் முன் கொடுப்பனவு சேவைகளை தபால் அலுவலக வலையமைப்பின் ஊடாக மேற்கொள்வது இடம்பெறுகின்றது,



கௌரவ அமைச்சரினால் UGEN தபால் முன்கொடுப்பனவு சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டமை.

2.4. **புதிய தபால் அலுவலகங்களை திறந்து வைத்தல்.**

வினைத்திறன்மிக்க தபால் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்காக சீதாவக்கபுர, இமதுவ, தலவாக்கலை, மதுரங்குளி, எல்ல ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் அலுவலக கட்டிடங்கள் மக்கள் சேவைக்காக திறந்துவைக்கப்பட்டன.



மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களினால் இமதுவ புதிய தபால் அலுவலக கட்டிடம் திறந்துவைக்கப்பட்டமை

### 2.5. வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- அமைச்சினுள் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஜனாதிபதி சுற்றறிக்கை இலக்கம் எஸ்பீ/எஸ்பி/03/10 ஆம் இலக்க 2010.05.31 ஆம் திகதிய அறிவுரைகளுக்கமைய அமைச்சின் இரத்திரனியல் அரச கொள்கையை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு சுற்றறிக்கை இலக்கம் 01/09 மற்றும் 2009.06.12 ஆம் திகதிய மற்றும் NARC/MRC/09/01 மற்றும் 2009.09.25 ஆம் திகதிய சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய அரசாங்க நிர்வாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.6. நூலக வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

- அமைச்சின் பதவியணியினரது தரமான கருத்து சார் மேம்பாட்டை நோக்காக் கொண்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமான சுமார் 988 புத்தகங்களைக் கொண்ட நூலகமொன்று நடாத்திச் செல்லப்படுகின்றது.

### 2.7. செயல் ரீதியான திட்டத்தைத் தயார்செய்வதும் செயலாற்றுகை அறிக்கைகளும்

- முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் சேவைகள் அமைச்சின் சகல பிரிவுகள், தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சம்பந்தமான திட்டங்கள், பிரேரணைகள் மற்றும் பணிகள் பற்றிய தகவல்களைப் பெற்று அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2004 இற்கு அமைய 2015 ஆம் ஆண்டுக்கான செயல் ரீதியான திட்டம் தயார் செய்யப்பட்டு நிதி அமைச்சு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- 2014 ஆம் ஆண்டில் தபால் சேவைகள் அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் தபால் திணைக்களம் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொண்டு தபால் சேவைகள் அமைச்சினதும்

தபால் திணைக்களத்தினதும் செயலாற்றுகை அறிக்கை தயார் செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

- 2014 ஆம் ஆண்டுக்கான முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக தயார் செய்யப்பட்ட மேற்படி திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்டதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.8. முன்னேற்றத்தை அறிக்கையிடல்

- ஜனாதிபதி செயலகம், நிதி திட்டமிடல் அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகங்களிடமிருந்து வினவப்படுகின்றன தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பற்றிய முன்னேற்றத்தை அறிக்கையிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்ற குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிப்பத்காக தபால் சேவைகள் அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் தபால் திணைக்களத்திற்கு ஏற்புடைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு “முன்னேற்ற அறிக்கை 2015 மற்றும் 2016 இன் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்” எனும் அறிக்கை தயார் செய்யப்பட்டது. மேலும் குழுநிலைக்குரிய முன்னேற்ற அறிக்கையும் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

## Utilization of Capital Budget of the Ministry as at 31st December 2015

- **Financial Progress** **Rs. Mn.**

| Institution | Allocation | Expenditure as at 31.12.2015 | % |
|---|---|---|---|
| Ministry | 29.201 | 29.087 | 99.6% |
| Department of Posts | 201.000 | 196.348 | 97.7% |
| Department of Muslim Religious and Cultural Affairs | 76.251 | 75.341 | 98.8% |

- **Physical Progress**

<table>
<tr><th colspan="2">Institution –Budget Vote</th><th>Key Performance Indicator</th></tr>
<tr><td colspan="2">❖ DOP/Rehabilitation and Improvement of Buildings(308-01-01-2001)</td><td>117 renovated works done in Post offices, CME and Postal Headquarters.</td></tr>
<tr><td colspan="2">❖ DOP/Building & Structure(308-01-01-2104)</td><td>04 new Post office Buildings completed (Imaduwa, Madurankuliya, Seethawakapura and Thalawakele)</td></tr>
<tr><td rowspan="3">❖ Training & Capacity Building</td><td>Ministry(108-01-01-2401)</td><td>32Training programmes and 86 officers trained</td></tr>
<tr><td>DOP(308-01-01-2401)</td><td>356 Training programmes conducted and 20,580 officers trained</td></tr>
<tr><td>DMRCA(202-01-01-2401)</td><td>06 Training programmes conducted and 50 officers trained</td></tr>
</table>

| | |
|---|---|
| ❖ DOP / Philatelic Development(308-01-01-2502) | 1,000 stamp catalogues (ii) (books) and 3,000 stamp catalogues (iii) (books) printed.<br>3,200 of Thematic stamps printed and 1,200 year packs printed. |
| ❖ DMRCA/(202-01-01-2502) | 70% completed the Kattankudy Mosque |
| ❖ DMRCA/(202-01-01-2502)National Mila dun Nabi programme | 92 Mosques, 4 Arabic Colleges and 1 Ahadiya Schools developed |
| ❖ DMRCA//(202-01-01-2502)Construction of Islamic Cultural Centers | 31 Mosques, 5 Arabic Colleges, 2 Ahadiya Schools and 4 religious institutions developed |

### 2.9. உலக தபால் தினம் 2015 – சிறந்த தபால் அலுவலகத்தைத் தேர்ந்தெடுத்தல்

உலக தபால் தினத்தின் தேசிய நிகழ்வை முன்னிட்டு தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சும், தபால் திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த நாட்டின் சிறந்த தபால் அலுவலகத்தை தெரிவு செய்வதற்காக நாடு முழுவதிலுமுள்ள பின்வரும் சிபாரிசு செய்யப்பட்ட பல தபால் அலுவலகங்களுக்கான வெளிக்கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றைக் கண்காணிப்புச் செய்து இறுதித் தீர்ப்புகளை வழங்க பங்களிப்பு வழங்கப்பட்டது.

| சிறப்புத்தர தபால் அலுவலகம் | I தர தபால் அலுவலகம் | II தர தபால் அலுவலகம் | உப தபால் அலுவலகம் |
|---|---|---|---|
| மாத்தறை | பெலிஅத்த | பிட்டபெத்தர | மாகல தெற்கு |
| நுவரெலியா | கட்டுகஸ்தோட்டை | ரம்பொட | லவன்தென்ன |
| குளியாபிட்டி | தும்பலசூரிய | வைக்கால் | மகுலாகம |
| பண்டாரவெல | தியதலாவ | பொரலந்த | பிடமாருவ |
| அநுராதபுரும் | ஹிங்குரக்கொட | விஜிதபுர | கலாஓயா |
| ஹொரண | ஹோமாகம் | புத்பிட்டிய | கிரிவத்துடுவ |
| பலாங்கொடை | புலத்கொகுபிட்டிய | கொட்டியாகும்புர | வேகல்ல |
| திருகோணமலை | உஹன | குச்சவெளி | கொனாகல |
| யாழ்ப்பாணம் | எருக்கலம்பிட்டி | மடு | மாதகல் |

ஊழியர்களை ஊக்குவிப்பதன் மூலம் தபால் சேவையில் உயர்மட்ட உற்பத்தித்திறனை ஏற்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.

### 2.10. சிறுநீரக நோய் ஒழிப்பு நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல்

ரஜரட்ட பிரதேசத்தில் துரிதமாகப் பரவி வருகின்ற சிறுநீரக நோயை ஒழிப்பதற்காக செயற்படுவது இன்று தேசிய பணியொன்றாக மாறியுள்ளதுடன், அமைச்சு மற்றும் திணைக்கள அலுவலர்களின் 2015 நவம்பர் மாதத்தின் ஒரு நாள் சம்பளத்தைப் பெற்று அதன் மூலம் 9.6 மில்லியன் ரூபா ஆன தொகை சனாதிபதி செயலணியினால் தாபிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோய் ஒழிப்பு நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.



தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் கௌரவ அமைச்சர் ஏ.எச்.எம். ஹலீம் அவர்களினால் சிறுநீரக நோய் ஒழிப்பு நிதியத்துக்கு **மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கு 9.6 மில்லியன் ரூபா ஆன தொகை அன்பளிப்புச் செய்யப்பட்டமை.**

## 2.11. போதைவஸ்து ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றி மக்களை அறிவுறுத்தல்

நாட்டில் உக்கிர நெருக்கடியொன்றாக காணப்படுகின்ற போதைவஸ்துக்களை ஒழிப்பது தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கு போதைவஸ்து தடுப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 12,000 போஸ்ரர்கள் (சுவரொட்டிகள்) நாடு முழுவதிலுமுள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், தபால் திணைக்களத்தின் பதவியணியினருக்கும் இது பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 2.12. வனரோபா எனும் தேசிய மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டம்

துரிதமாக அழிவடைந்து வருகின்ற இலங்கையின் இயற்கை வனாந்தரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் அமுல்படுத்துகின்ற **வனரோபா எனும் தேசிய மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை** முன்னிட்டு தபால் அலுவலக வளவுகளில் மரம் நடும் வேலைத்திட்டமொன்று அமைச்சு மற்றும் தபால் திணைக்களத்தினால் வடமேல் மாகாண தபால் அலுவலகங்களை மையமாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டது. இதன் கீழ் பல்வேறு வகையான செடிகள் (பழவகை, மருந்து, பலகைக்கான மரங்கள், வீட்டுத் தோட்டம்) நாட்டப்பட்டு இந்த தேசிய பணிக்கு பங்களிப்பு வழங்கப்பட்டதன் மூலம் இலங்கையின் நிலையான சுற்றாடல்சார் நிலைத்திருத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்க முடிந்தது.



வனரோபா எனும் தேசிய மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு கௌரவ அமைச்சர், தபால் தலைமையக வளவில் மரம் நடுகையில்.

### 2.13. எரிசக்திப் பாதுகாப்பு முறையியல்களை அமுல்படுத்தல்

அரசாங்க நிறுவனங்களில் சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைப் பழக்கப்படுத்தல் மற்றும் அதன் மூலம் எரிசக்தியை சேமிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள எரிசக்தியை பாதுகாக்கும் முறையியல்களை அமுல்படுத்துவதானது இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அமைச்சின் சகல பிரிவுகளையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக நியமனம் செய்யப்பட்ட எரிசக்தி முகாமையாளர் ஒருவரின் கீழ் குறித்த பாதுகாப்பு முறையியல்கள் அமுல்படுத்தப்பட்டு மின்சாரப் பயன்பாட்டை 10% இனால் குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாதாந்தம் அதன் முன்னேற்றத்தை அவதானிப்புச் செய்யவும், மும்மாத அடிப்படையில் மேற்படி முன்னேற்றத்தை நிலைபேறான சக்தி அதிகார சபைக்கு அறிக்கையிடவும் திட்டமிடப்பட்டது.

### 2.14. டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

டெங்கு நோயை ஒழிப்பதற்காக நுளம்புகள் பரவும் இடங்களை இனங்காண்பதற்கும், அவ்விடங்களை சுத்தம் செய்வதற்கும், இது பற்றி சுகாதார அமைச்சுக்கு மாதாந்தம் அறிக்கையிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 2.15. பிளாஸ்ரிக் மற்றும் பொலிதீன் உபயோகம் காரணமாக இடம்பெற்றுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான சுகாதார, சுற்றாடல், சமூக அழுத்தங்களை குறைத்துக் கொள்வதற்கான உத்தேச நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.

பிளாஸ்ரிக் மற்றும் பொலிதின் உற்பத்திகளைப் பயன்படுத்துவது இன்று சமூகத்தில் அத்தியாவசிய அம்சமொன்றாக மாறியுள்ளதுடன், அவற்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல், அகற்றல், எரித்தல் போன்ற காரணங்களினால் சமூக, சுற்றாடல், சுகாதார மற்றும் பொருளாதார சிக்கல்கள் பல உருவாகியுள்ளன. எனவே மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் வழிகாட்டலுக்கு அமைய சமய நிகழ்வுகளுக்காக அழங்கார வேலைகளை மேற்கொள்ளும் போது மற்றும் சமய வைபவங்களின் போது பிளாஸ்ரிக், பொலிதீன் பயன்பாட்டைக் குறைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அமைச்சின் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற சமய நிறுவனங்களை அறிவுறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன், மேற்படி திணைக்களத்தினால் தேவையானவாறு அறிவுறுத்தப்பட்டு பொலிதீன் பயன்படுத்துவதைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 03. விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள்

சர்வதேச தபால் சங்கம் மற்றும் ஆசிய பசுபிக் தபால் சங்கத்தின் கொள்கைகள், யாப்புக்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கைத் தபால் சேவையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை பற்றி முன்ஆய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய மேற்படி நடவடிக்கைகளை வழிநடாத்துவதற்காக தபால் திணைக்களத்தையும், அமைச்சினையும் ஒருங்கிணைப்புச் செய்து தபால் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும்,

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிருவாக மற்றும் தாபன நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சின் நிருவாக மற்றும் தாபனப் பிரிவு மற்றும் அபிவிருத்திப் பிரிவுடன் ஒருங்கிணைப்புச் செய்து,

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் பணிகளை வினைத்திறனுடனும், பயன்மிக்கவாறும் நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலவல்கள் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டில் விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரிவு தாபிக்கப்பட்டதுடன், இப்பிரிவின் கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கமைய, உதவிச் செயலாளர் ஒருவர், அலுவலர்கள் 6 பேர் மற்றும் அலுவலக சிற்றூழியர் ஒருவருக்கு கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தேவையான அலுவலக இடவசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதற்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள், இயந்திரசாதனங்கள், கணனியும், உதிரிபாகங்களும், தொலைபேசி, இணையத்தள வசதிகள் போன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவு மேலதிக செயலாளர் ஒருவர் மற்றும் உதவிச் செயலாளர் ஒருவரின் கீழ் கண்காணிப்புச் செய்யப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் பின்வரும் பணிகள் இப்பிரிவின் கண்காணிப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

### 3.1 தபால் நடவடிக்கைகள்

- பயிற்சிக்காக வெளிநாடு சென்று நாடு திரும்பும் தபால் திணைக்கள அலுவலர்களின் அறிக்கைகளை ஆராய்ந்து தபால் சேவையின் அபிவிருத்திக்குத் தேவையான புதிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- முத்திரைக் கொள்கைக்கு அமைய முத்திரைப் பணியகத்தின் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் கண்காணிப்புச் செய்தமை.
- முத்திரை திட்டங்கள், சித்திரக் குறிப்புக்கள், அது தொடர்பான தொணிப்பொருள்களுடன் இணங்குதல் மற்றும் முத்திரை அச்சு தொழில்நுட்ப முறையியல்களைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக தபால் திணைக்களத்துக்கு அறிவுரை வழங்கப்பட்டதுடன், மேற்படி நடவடிக்கைகளும் கண்காணிப்புச் செய்யப்பட்டது.
- முத்திரை ஆலோசனைப் பணியகத்தின் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் முறையாக இடம்பெறுவது தொடர்பில் கண்காணிப்புச் செய்யப்பட்டது.
- முத்திரைச் சேவை நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை தபால் துறைக்குப் பதிலீடு செய்து புதிய சேவைகளை ஆரம்பிக்கத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- விசேட தபால் சேவைகளான நீர்ப் பட்டியல்களைச் சேகரித்தல், ஈ செனலின் சேவை வசதிகள் மற்றும் சம்பத் வங்கி ATM ஊடாக காசுக் கட்டளைகளை அனுப்பும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு தரப்பினர்களுடனும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும் நடவடிக்கைகள் கண்காணிப்புச் செய்தமை.

- தபால் அலுவலகங்களை வலையமைப்புச் செய்யும் செயன்முறை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை மட்டத்தில் தபால் திணைக்களத்திற்கு உதவி வழங்கப்பட்டதுடன், கண்காணிப்புச் செய்தமை.

- உப தபால் அலுவலக நடவடிக்கைகளை வலையமைப்புச் செய்யும் செயன்முறைக்குத் தேவையான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தமை மற்றும் அது தொடர்பான கருத்திட்ட அறிக்கைகளை திறைசேரிக்கு அனுப்பியமை.

### 3.2 முஸ்லிம் சமய அலுவல்கள்

- பள்ளிவாசல்கள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 14 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி நாடு முழுவதிலுமுள்ள பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்வதற்கு திணைக்களத்துக்கு உதவுவதும், திணைக்களத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்வதும்.
- இஸ்லாமியர்களின் முன்னுரிமை சமய நிகழ்வொன்றான ஹஜ் யாத்திரிகை நடவடிக்கைகளை முறையாக ஒழுங்குசெய்வதற்வதை கண்காணிப்புச் செய்தல்.

- இதுவரை புத்த சாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த அரபுக் கல்லூரிகளைக் கூட்டிணைப்பது பற்றிய தனியார் உறுப்பினர்களின் சட்ட மூலங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை. அவ்வாறான 15 சட்டமூலங்களை திருத்தியமைத்தல் மற்றும் அங்கீகாரம் வழங்குவதற்காக உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டமை.

- முஸ்லிம்களின் றமழான் நோன்புக் காலப்பகுதியில் அவர்களுக்குத் தேவையான பேரீத்தம் பழங்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்து 291 மெற்றிக் தொண் பேரீத்தம் பழங்கள் நாடு முழுவதிலுமுள்ள பள்ளிவாசல்களுக்கு திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டதுடன், இது தொடர்பான கண்காணிப்பு மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- பள்ளிவாசல்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள், அஹதியா அறநெறிப் பாடசாலைகள், சீருடைகள் மற்றும் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக திணைக்களத்துடன் இணைந்து அவற்றை ஒருங்கிணைப்புச் செய்தல், கண்காணிப்புச் செய்தல், மேற்படி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளத் தேவையான அறிவுரைகளை வழங்குதல் மற்றும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

- 2015 ஆம் ஆண்டின் மீலாதுன் நபி நிதியத்திற்கென 14.0 மில்லியன் ரூபா முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதன் மூலம் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள், கலாசார நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளும், அஹதியா பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. தேசிய மீளாதுன் நபி விழா பொல்கொல்ல மகிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்பணிகளை ஒழுங்குசெய்யும் பொருட்டு திணைக்களத்திற்கு ஒத்துழைப்பும், வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

- ஹஜ் யாத்திரை முறையியலை மென்மேலும் வெளிப்படைத்தன்மையுடன் அமுல்படுத்துவதற்கான ஆரம்பத் திட்டங்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

- அரபுக் கல்லூரிகளில் மௌலவிப் பரீட்சைகள் நடாத்துவதை முறைப்படுத்துவதற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்துடன் ஆரம்பக் கலந்துரையாடலை நடாத்துவதற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது.
- வகுப் சட்டத்தை காலத்திற்கு ஏற்றவாறு திருத்தியமைக்க வேண்டியதன் தேவை இனங்காணப்பட்டு அது தொடர்பான திருத்தங்களைப் பெற்றுக் கொள்ளத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- பள்ளிவாசல் நிருவாகம் தொடர்பான நடவடிக்கைகளை முறைப்படுத்தவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- பள்ளிவாசல் நிருவாகம் தொடர்பாக சனாதிபதி செயலகத்துக்கும், பிரதம அமைச்சர் அலுவலகத்துக்கும், அமைச்சுக்கும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் மற்றும் பிரேரணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 04. உள்ளக கண்க்காய்வு வினாக்கள் 2015 ஆம் ஆண்டு

கணக்காய்வுத் திட்டத்துக்கு அமைய தபால், தபால் சேவைகள், முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் பின்வருமாறாகும்.

01. **மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் பரிசோதனைகள்**
    - முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சு 17
    - முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் 11
02. **வாகனங்கள் விபத்துக்களுக்கு உட்பட்டமை சம்பந்தமாக நிதி பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனைகள் நடாத்தல்**
    - முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சு 17
03. **மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வு நடவடிக்கைகள்**
    - தபால் திணைக்களம் 03
04. **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நான்கு (04) நடாத்தப்பட்டமை.**
05. **ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்யப்பட்டமை.**
06. **2015 ஆம் ஆண்டுக்கான நான்கு (04) காலாண்டு அறிக்கைகள் தயார் செய்யப்பட்டமை.**

## 05. நிதி நடவடிக்கைகள்

- **மீண்டெழும் செலவினம்**

2015 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் ஏற்பாடுகள் மற்றும் 2015.12.31 ஆம் திகதி வரை செய்யப்பட்டுள்ள செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு

| செலவுத் தலைப்பு | விபரம் | திருத்திய மதிப்பீட்டுக்கு அமைய ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|
| | **ஆளுக்குரிய வேதானதிகள்** | **58,500,000.00** | **55,767,041.85** |
| 1001 | சம்பளமும், வேதனமும் | 26,900,000.00 | 25,572,174.01 |
| 1002 | மேலதிக நேரமும், லீவு நாள் சம்பளமும் | 3,500,000.00 | 2,315,735.70 |
| 1003 | பிற கொடுப்பனவுகள் | 28,100,000.00 | 27,879,132.14 |
| | **பிரயாணச் செலவினம்** | **4,112,500.00** | **4,027,208.91** |
| 1101 | உள்நாடு | 1,332,500.00 | 1,329,056.55 |
| 1102 | வெளிநாடு | 2,780,000.00 | 2,698,152.36 |
| | **பராமரிப்புச் செலவினம்** | **12,997,500.00** | **12,861,572.77** |
| 1201 | எழுதுகருவிகள், அலுவலக தேவைகள் | 4,300,000.00 | 4,165,415.67 |
| 1202 | எரிபொருள் | 7,707,500.00 | 7,707,076.44 |
| 1203 | உணவு, குடிபானம், சீருடை | 990,000.00 | 989,080.66 |
| | **பராமரிப்புச் செலவினம்** | **8,996,000.00** | **8,984,900.75** |
| 1301 | வாகனம் | 8,529,000.00 | 8,524,935.18 |
| 1302 | பொறியும், இயந்திரசாதனமும் | 462,000.00 | 458,465.57 |
| 1303 | கட்டிடமும், நிர்மாணிப்பும் | 5,000.00 | 1,500.00 |
| | **சேவைகள்** | **16,309,500.00** | **16,211,576.58** |
| 1401 | போக்குவரத்து | 2,102,000.00 | 2,019,385.48 |
| 1402 | தபாலும், தொடர்பாடலும் | 2,085,000.00 | 2,078,726.59 |
| 1403 | மின்சாரமும், நீரும் | 4,740,000.00 | 4,736,870.79 |
| 1404 | குத்தகை வாடகையும், உள்ளூராட்சி மன்ற வீத வரியும் | 2,569,500.00 | 2,569,354.84 |
| 1405 | ஏனையன | 4,813,000.00 | 4,807,238.88 |
| | **மாற்றல்கள்** | **777,500.00** | **777,334.62** |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 777,500.00 | 777,334.62 |
| | **வேறு மீண்டெழும் செலவினம்** | **6,000.00** | **5,950.00** |
| 1701 | நட்டமும், பதிவழிப்பும் | 6,000.00 | 5,950.00 |
| | **மொத்தம்** | **101,699,000.00** | **98,635,585.48** |


- **மூலதனச் செலவினம்**

2015 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூலதன ஏற்பாடுகள் மற்றும் 2015.12.31 ஆம் திகதி வரை செய்யப்பட்டுள்ள செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு

| செலவுத் தலைப்பு | விபரம் | திருத்திய மதிப்பீட்டுக்கு அமைய ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|
| | **மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்** | **6,250,000.00** | **6,161,114.27** |
| 2001 | கட்டிடங்கள் | 2,600,000.00 | 2,541,541.83 |
| 2002 | பொறியும், இயந்திரசாதனங்களும் | 250,000.00 | 236,823.06 |
| 2003 | வாகனங்கள் | 3,400,000.00 | 3,382,749.38 |
| | | | |
| | **மூலதன சொத்துக்கள் கொள்வனவு** | **6,436,000.00** | **6,417,694.57** |
| 2102 | தளபாடமும், அலுவலக உபகரணங்களும் | 2,153,000.00 | 2,136,203.06 |
| 2103 | பொறியும், இயந்திரசாதனங்களும் | 4,283,000.00 | 4,281,491.51 |
| 2104 | கட்டிடமும், நிர்மாணிப்பும் | 0.00 | 0.00 |
| | | | |
| | **திறன் விருத்தி** | **1,290,000.00** | **1,283,209.02** |
| 2401 | பயிற்றுவித்தல் மற்றும் திறன் விருத்தி | 1,290,000.00 | 1,283,209.02 |
| | | | |
| | **வேறு மூலதனச் செலவினங்கள்** | **15,225,000.00** | **15,225,000.00** |
| 1-2-0-2502 | வேறு முதலீடுகள் - முத்திரை மற்றும் தபால் சேவைகளை மேம்படுத்தல் | 4,000,000.00 | 4,000,000.00 |
| 1-2-0-2502 | வேறு முதலீடுகள் - தபால் வலையமைப்புக் கருத்திட்டம் | 11,225,000.00 | 11,225,000.00 |
| | **மொத்தம்** | **29,201,000.00** | **29,087,017.86** |

Annexure 01

# Organizational Chart – Ministry of Posts, Postal Services and Muslim Religious Affairs



Annexure 02

# Cadre Information as at 31st December 2015

**Ministry -** Ministry of Posts , Postal Services and Muslim Religious Affairs

**Address -** 6th & 7th floors, Postal Headquarters Building, 310, D.R. Wijewardhana Mawatha, Colombo 10.

| Designation | Specialization | Service | Grade/Class | Salary Code | Service Level | Approved Cadre | | | Existing Cadre | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Permanent | Casual | Contract | Permanent | Casual | Contract | |
| Secretary | | | | SL-4 | Senior Level-1 | 1 | | | 1 | | | |
| Addl. Secretary | Admin. & Finance | SLAS | Special | SL-3 | -do- | 1 | | | 1 | | | |
| Addl. Secretary | Development | -do- | Special | SL-3 | -do- | 1 | | | 1 | | | |
| Addl. Secretary | Muslim Religious Affairs & Special Postal Services | UPS | 1 | SL-3 | -do- | 1 | | | 1 | | | |
| Chief Accountant | | SLAcS | 1 | SL-1 | -do- | 1 | | | 1 | | | |
| Chief Internal Auditor | | -do- | 1 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Senior Asst. Secretary | | SLAS | 1 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Director | Planning | SLPS | 1 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Dy. Director/Asst. Director | Planning | -do- | 11/111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Accountant | Payments | SLAcS | 11/111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Asst. Secretary | Administration | SLAS | 11/111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Asst. Secretary | Development | | 11/111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Asst. Secretary | Muslim Religious Affairs & Special Postal Services | SLAS | 11/111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Legal Officer | | Dept. | 111 | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Administrative Officer | | PMAS | Supra | MN-7 | Tertiary Level-2 | 1 | | | 1 | | | |
| Information & Communication Technology Officer | | SLICTS | | MN-6 | -do- | 1 | | | 0 | | | |
| Translator | (S/E) and( S/T) | TS | 1 | MN-6 | -do- | 2 | | | 1 | | | |
| Co- ordinating Secretary to the Secretary | | Temporary | | Rs. 22,250/-(Monthly Allowance) | Secondary Level-3 | | 1 | | | 1 | | |
| Information & Communication Technology Assistant | | SLICTS | 111 | MT-1 | -do- | 2 | | | 0 | | | |
| Development Officer | | DOS | | MN-4 | -do- | 10 | | | 6 | | | |
| Budget Assistant | | Asso. Officer | | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Development Assistant | | -do- | | -do- | -do- | 19 | | | 16 | | | |
| Supply Assistant | | -do- | | -do- | -do- | 1 | | | 1 | | | |
| Audit Assistant | | -do- | | -do- | -do- | 5 | | | 5 | | | |
| Transport Officer | | SLTS | | MN-3 | -do- | 1 | | | 0 | | | Not yet recruited |
| Public Management Assistant | | PMAS | 1/11/111 | MN-2 | -do- | 22 | | | 17 | | | 2 PMAS officers are attached by Dept. of Muslim Religious and cultural Affairs in temporary basis |
| Driver | | DS | 1/11 | PL-3 | Primary Level-4 | 13 | | | 9 | | | |
| K.K.S. | | OES | 1/11/111 | PL-1 | -do- | 17 | | | 17 | | | 03 OES are substitutes of Dept. of Post and 01 OES is attached by Dept. of Muslim Religious and cultural Affairs in temporary basis |
| Camera Operator | | Temporary | | 14,425/- (Monthly) | -do- | | 1 | | | 1 | | |
| Still Photographer | | Temporary | | 14,425/- (Monthly) | -do- | | 1 | | | 0 | | Not yet recruited |
| Camera Operator Aide | | Temporary | | 11,730/- (Monthly) | -do- | | 1 | | | 1 | | |
| Total | | | | | | 109 | 04 | - | 88 | 03 | | |